சுருக்கம்

மோட்டார் வாகனம் – பெரம்பலூர் மாவட்டம், தா.பழூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட உதயநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்த திரு.மாயமேகம் என்பவர், ஆம்புலன்ஸ் வண்டி எண். டி.என்.46ஜி 0017 விபத்துக்குள்ளானது – இழப்பீட்டுத் தொகை வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு ஆணை வெளியிடப்படுகிறது.

---

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி–1) துறை

அரசாணை (2 பத்தாண்டு) எண்: 70 நாள்: 30. 07. 2014

ஜய – ஆடி 14
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்கப்பட்டது:

இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை அவர்களின் கடிதம் ந.க. எண்.120895/ஆசுநி–4/அ2/2012, நாள் 16.05.13, 26.07.13, 23.01.14, 6.03.14 மற்றும் 13.03.14

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை அவர்கள் பெரம்பலூர் சுகாதாரப்பகுதி மாவட்டம், தா.பழூர் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட உதயநத்தம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் துப்புரவுப் பணியாளராகப் பணிபுரிந்த திரு.மாயமேகம் என்பவர் மாற்றுப்பணியில் கடந்த 23.01.2011 அன்று மாலை 4.45 மணியளவில் ஆண்டிமடம் வட்டாரத்தைச் சார்ந்த ஆம்புலன்ஸ் வண்டி எண் டி.என்.46ஜி 0017 என்ற வாகனத்தில் [illegible] சொட்டு மருந்துப் பெட்டிகளை எடுக்கச் செல்லும்போது வாகனத்திலிருந்து கீழே விழுந்து விபத்து ஏற்பட்டு முதுகெலும்பு தண்டுவடம் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும், அவர் அரியலூர் மாவட்ட குற்றவியல் நீதிமன்றத்தில் விபத்து நஷ்ட ஈடு கோரி 01.11.2011 அன்று (எம்.சி.ஏ.எண் 46/2011 கீழ்) வழக்கு தொடர்ந்ததில் கடந்த 27.06.2012 அன்று தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது என்றும், அத்தீர்ப்பின்படி தனியருக்கு ரூ. 25,00,000/– (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நஷ்ட ஈடு தர வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இழப்பீட்டுத் தொகையான ரூ. 25,00,000/–க்கு 01.11.2011 முதல் 31.07.2013 வரை 7.5% வட்டி கணக்கிட்டு ஆக கூடுதல் ரூ. 28,84,810/– (ரூபாய் இருபத்தெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து எண்ணூற்றி பத்து மட்டும்) வழங்குமாறு பொது

சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் தனது கருத்துரையில், இவ்வழக்கானது (எம்.சி.ஏ.எண்.46/2011) மேற்படி விபத்தானது வாகன ஓட்டுநர் கண்மூடித்தனமாக வாகனத்தை ஓட்டியதால்தான் நடந்தது எனவும், அதனால்தான் மனுதாரரின் உடல்நிலை பாதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்து இவ்வழக்கு மேல் முறையீட்டிற்கு உகந்தது அல்ல என தெரிவித்துள்ளதை பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

2. மேற்காணும் சூழ்நிலையில் பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர், இயக்கவூர்தி விபத்துகள் கோருரிமை தீர்ப்பாயத்தில் எம்.சி.ஏ.எண்.46/2011 என்ற வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி ரூ.28,84,810/– (ரூபாய் இருபத்தெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து எண்ணூற்றி பத்து மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் கோரிக்கையை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அவற்றை ஏற்கலாம் எனவும் இழப்பீட்டுத் தொகைக்கு நாளது தேதி வரை வட்டி கணக்கிடலாம் என முடிவு செய்து **01.11.2011** முதல் **30.04.2014** வரை இழப்பீட்டுத் தொகையான ரூ. **25,00,000/–**ஐ கீழ்க்கண்டவாறு ஆண்டிற்கு **7.5%** வட்டி கணக்கிட்டு ரூ. **30,25,307/–** (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து முந்நூற்று ஏழு மட்டும்) ஒப்பளித்து அரசு ஆணையிடுகிறது:–

| | |
|---|---|
| இழப்பீட்டுத் தொகை | ரூ. 25,00,000/– |
| வருடாந்திர வட்டி வீதம் | 7.5% |
| **01.11.2011** முதல் **30.04.2014** வரை | 30 மாதங்கள் |
| வட்டி | அசல் x காலம் x வட்டி வீதம் |
| ஒரு மாதத்திற்கு வட்டி | $\frac{25,00,000 \times 1/12 \times 7.5}{100} = 15,625$ |
| **01.11.2011** முதல் **30.04.2014** வரை **30** மாதங்கள் | **15,625x30 = 4,68,750** |
| தீர்ப்புரையில் குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர் இழப்பீட்டு ஆணையர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டிய மொத்த தொகை | ரூ. 25,00,000/–<br>ரூ. 4,68,750/–<br>ரூ. 56,557/–<br>————————<br>ரூ. 30,25,307/–<br>———————— |

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:—

"2210—மருத்துவமும் பொது சுகாதாரமும் — 03 ஊரக சுகாதாரப்பணிகள் — ஆங்கிலமுறை மருத்துவம் — 103 ஆரம்ப சுகாதார நிலையங்கள் — I திட்டத்தில் சேராதது — BI தொடக்க சுகாதார நிலையங்கள் — 51 இழப்பீடு — 02. ஏனைய இழப்பீடுகள்" (சாட்டியது)
( த.தொ.கு.2210—03—103—BI —5125)

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்திற்கான கூடுதல் நிதி 2014—2015ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும், இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2014—15ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், 2014—2015ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்திற்கான கருத்துருவை நிதித் (சுகாதாரம்—I) துறைக்கு அனுப்பும் பொழுது இத்தொகையையும் தவறாமல் சேர்த்து இச்செலவினத்தை துணை மதிப்பீட்டில் சேர்த்திடும் பொருட்டு தேவையான விளக்கக் குறிப்பினையும் நிதித் (வ.செ.பொ—I) துறைக்கு அனுப்புமாறு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும் இதுபோன்ற கருத்துருவில் ஏற்படும் காலதாமதத்தால் அரசுக்கு கூடுதல் செலவினங்களைத் தவிர்க்கும் வகையில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும், மேலும் இவ்விபத்து நேரக் காரணமான ஓட்டுநர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் முடிவை அரசுக்குத் தெரிவிக்குமாறும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.41705/சுகாதாரம்-I/2014 நாள் 30.07.2014 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 830 (எண்ணூற்று முப்பது) பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ. ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர், சென்னை—6.
துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அரியலூர் மாவட்டம்.
மாநிலக்கணக்காயர், சென்னை—18/35
மாவட்ட கருவூல அலுவலர், அரியலூர்.

<u>நகல்:</u>

முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலைநேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–9.
உள் (போ. வ ) துறை, சென்னை–9.
நிதித் (வ.செ. பொது–2 / சுகாதாரம் – I) துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–09.
இருப்பு கோப்பு / சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/7/14

பிரிவு அலுவலர்.

30/7/14